1981 ஏப்ரல் 28]

கைத்தறியில் உற்பத்தியாகும் பாலிஸ்டர் துணிகள்.

*வினா எண் 926—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு கைத்தறி கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறியில் உற்பத்தியாகும் பாலிஸ்டர் துணிக்கு எக்ஸைஸ் வரியை ரத்து செய்யுமாறு மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தி உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இதுபற்றிய விவரம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: (அ) ஆம்.

(ஆ) இது மத்திய அரசின், நிதித்துறையில் பரிசீலனையில் உள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாலிஸ்டர் பொறுத்தவரை கைத்தறியில் உற்பத்தி செய்வதற்கு அதிக முயற்சி எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஆனால், இது மெஷின் தறிகளோடும், மில்களோடும் போட்டி போடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இந்த வரி உயர்வினால் மேலும் அதன் விலை அதிகமாகும் என்பதை வற்புறுத்தி, உடனடியாக இதற்கு வரி விலக்கு அளிக்கும்படி செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை மனதிலே கொண்டுதான் 1976-லே இருந்து தொடர்ந்து இந்த அரசு வற்புறுத்திக் கொண்டு வருகிறது. சமீபத்தில் 1981 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் கடிதத்தில், இக்கருத்துருவை மத்திய அரசு நிதி அமைச்சகத்தின் கவனத்திற்கு கடிதம் எழுதியுள்ளோம். மத்திய அரசின் முடிவான பதில் எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, தொடர்ந்து வலியுறுத்துவதற்குக் காரணம், பாலிஸ்டர் கைத்தறித் துணியின் விலை குறைவாகவும், அதே நேரத்தில் நெசவாளர்களுக்கு அதிகக் கூலி கொடுக்கவும், இதை உணர்ந்து மிகவும் அழுத்தமாக மத்திய அரசை நாம் வலியுறுத்தி வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே எழுதப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நன்றி. ஆனால், பரிசீலனையில் இருக்கின்றது என்ற பெயரால் காலம் கடத்தக் கூடாது. சீக்கிரமாக அனுமதி வழங்க மீண்டும் மத்திய அரசைக் கவனப்படுத்துமா? வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வற்புறுத்தலாம்.

திரு. ஏ. சி. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இயந்திரத் துணியோடு போட்டியிடும் கைத்தறிப் பாலிஸ்டர் துணிகளுக்கு மத்திய அரசு வரியை ரத்து செய்ய முன்வரவில்லை என்றாலும், குறைக்க முன்வருமா? எக்சைஸ் வரி தற்போது மத்திய அரசு எவ்வளவு விதிக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயத் தீர்வை என்பதுதான் எக்சைஸ் டியூடி. இதை முழுவதுமாக ரத்து செய்யும்படி கோரியிருக்கிறோம். இது எந்த அளவு தற்போது வசூலிக்கப்படுகின்றது என்று கேட்டார்கள். பதனிடப்படாத செயற்கை இழை கலந்த துணிகளின் (100 சதவீதம் பாலியஸ்டர் துணிகள்) மீது ஆயத் தீர்வை விதிப்பு இல்லை. ஆயத் தீர்வை, துணிகளின் விலை அடிப்படையில் விதிப்பின்கீழ் விதிக்கப்படுகிறது. துணியின் விலை ஒரு சதுர மீட்டர் ரூ. 3-க்கு மிகாமல் இருப்பின், ஒரு சதவிகிதம் பெருமான விகிதம்; துணியின் விலை ஒரு சதுர மீட்டருக்கு ரூ. 3-க்கு மேல் மிகுந்தும், ஆனால் ரூ. 4-க்கு மிகாமலும் இருப்பின், ஒரு ச.மீ.-க்கு 3 பைசாவும், ஒரு ச.மீ. துணியில் உண்மை மதிப்புக்கும் ரூ. 3-க்கும் உள்ள வித்தியாசத்தில் 7 சதவிகிதம், துணியின் விலை ஒரு ச.மீ.-க்கு ரூ. 4-க்கு மேல் மிகுந்தும், ஆனால் ரூ. 5-க்கு மிகாமலும் இருப்பின், ஒரு ச.மீ.-க்கு 10 பைசாவும், ஒரு ச.மீ. துணியின் உண்மை மதிப்புக்கும் ரூ. 4-க்கும் உள்ள வித்தியாசத்தில் 7 சதவீதம் என்று இப்படி தர வாரியாக ஆயத் தீர்வைகள் போட்டு வருகிறார்கள். ஆயத் தீர்வை பாலியஸ்டரின் அடிப்படையில் வசூலிக்கப்படுகிறது. இப்படி மத்திய அரசு உத்தரவிட்டால், பாலியஸ்டர் துணியின் விலை அதிகமாகிப் போய்விடும், எனவே ஆயத் தீர்வையைக் குறைத்தால் மலிவு விலையில் விற்கலாம் என்பதை மனதில் கொண்டு இதை வலியுறுத்தி வருகிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருபுவனம் பட்டு கூட்டுறவு சங்க நெசவாளர்கள் செலுத்திய தொகை.

* வினா எண் 927—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு கைத்தறி கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருபுவனம் பட்டு கூட்டுறவு சங்க நெசவாளர்கள் C.T.F. நிதியாக செலுத்திய பணம் அரசு Contribution நிதி ஆகியவை கும்பகோணம் கூட்டுறவு மத்திய வங்கியில் நிலுவையில் உள்ள தொகை எவ்வளவு?

(ஆ) இத்தொகை நெசவாளர்களுக்கு கொடுக்க ஏதேனும் தடையுண்டா?